செய்தி வெளியீடு எண்:523 நாள்:29.07.2021

**ரேலா மருத்துவமனையில் தழும்பில்லா ரோபோடிக் கல்லீரல் தான அறுவை சிகிச்சை மையத்தை திறந்து வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை – 29.7.2021**

மாண்புமிகு தமிழகத்தினுடைய அமைச்சர் பெருமக்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

ரேலா மருத்துவமனையின் சார்பில் நடைபெறக்கூடிய இந்த விழாவிற்கு மூலக்காரணமாக இருக்கக்கூடிய முன்னிலைப் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய ரேலா மருத்துவமனையின் தலைவர் பேராசிரியர் டாக்டர் முகமது ரேலா அவர்களே!

ஜே.ஆர். சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையினுடைய தலைவர் பேராசிரியர் டாக்டர் ஜெ. ஸ்ரீநிஷா அவர்களே!

“திராவிட ஆழ்வார்” என்று எங்களால் போற்றப்படக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் அவர்களே!

ரேலா மருத்துவமனையினுடைய மருத்துவர்களே! செவிலியர்களே! ஊழியர்களே!

வருகை தந்திருக்கக்கூடிய பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த ரேலா மருத்துவமனையை கடந்த 2018-ஆம் ஆண்டு நான் திறந்து வைக்க வேண்டும் என்று நம்முடைய ஜெகத்ரட்சகன் அவர்கள் அழைத்து வந்தார்கள், நானும் திறந்து வைத்தேன். இன்று மிகப் பிரமாண்டமாக மருத்துவமனை வளர்ந்திருக்கிறது. உலகத் தரம் வாய்ந்த

மருத்துவமனையாக ரேலா மருத்துவமனை பெயர் எடுத்திருப்பதைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது!

மருத்துவர் முகமது ரேலா அவர்கள், உலகப் புகழ் பெற்றவர். இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், இங்கே துணை வேந்தர் அவர்கள் பேசும்போது, இது குரோம்பேட்டையில் அமைந்திருப்பதைப் பெருமைப்படுத்திப் பேசினார். நான் பேசவிருப்பது, எங்கள் மண்ணுக்குரியவர் நம்முடைய ரேலா அவர்கள். தஞ்சை மண்ணுக்குரியவர். மயிலாடுதுறைக்கு அருகில் கிளியனூர் என்ற கிராமத்தில் பிறந்தவர், அதிலே எனக்கொரு பெருமை. தன்னுடைய மருத்துவத் திறமையால் மக்களை வாழவைத்துக் கொண்டு இருப்பது உண்மையிலேயே தமிழ்நாட்டுக்குக் கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய பெருமையாக இருக்கிறது. 4500-க்கும் மேற்பட்ட கல்லீரல் மாற்றுச் சிகிச்சையைச் செய்திருக்கக்கூடியவர் நம்முடைய மருத்துவர் ரேலா அவர்கள். பிறந்து ஐந்து நாளே ஆன குழந்தைக்கு அவர் செய்த சிகிச்சைக்காக கின்னஸ் சாதனையாளராக இன்றைக்கும் போற்றக்கூடிய நிலைக்கு வந்திருக்கக்கூடியவர். எந்த வயதினராக இருந்தாலும் - எவ்வளவு மிக மோசமாக உடல்நிலை பாதிக்கப்பட்டவராக இருந்தாலும் - அவர்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய வல்லவராக நம்முடைய டாக்டர் ரேலா விளங்கிக் கொண்டிருக்கிறார்.

இத்தகைய திறமைசாலிக்காக ஒரு மருத்துவமனையை உருவாக்கி, அவரது பெயரையே வைத்துக் கொடுத்த ஜெகத்ரட்சகன் அவர்களுடைய பெருந்தன்மையை உள்ளபடியே நாம் பாராட்டியாக வேண்டும். 'இந்தியாவிலேயே தலைசிறந்த மருத்துவமனையாக, தமிழ்நாட்டில் தலைசிறந்த மருத்துவமனையாக இது இருக்க வேண்டும். வேறு எந்த எதிர்ப்பார்ப்பும் எனக்கு இல்லை' என்று ஜெகத்ரட்சகன் அவர்கள் சொன்னதாக டாக்டர் ரேலா அவர்கள் ஒரு பேட்டியிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

பொதுவாக, எதிர்பார்ப்புகள் இல்லாத மனிதராக வலம் வரக்கூடியவர்தான் நம்முடைய ஜெகத்ரட்சகன் அவர்கள். அரசியல் பணி, கல்விப்பணி, ஆன்மீகப் பணியைப் போலவே மருத்துவப் பணியையும் அவர்

திறம்படச் செய்து கொண்டிருக்கிறார். அவருக்குத் துணையாக இருக்கக்கூடிய ரேலா அவர்களையும், மருத்துவர் ஸ்ரீநிஷா அவர்களையும் நான் இந்த நேரத்திலே மனதாரப் பாராட்டுகிறேன்.

மருத்துவத்தினுடைய தேவையை நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை. கொரோனா என்ற கொடிய வைரஸ் நோய் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் உணர்த்திவிட்டது. கொரோனா வைரஸ் ஒருவிதமான பயத்தை உருவாக்கி இருக்கிறதே தவிர, அது நம்முடைய நடைமுறைகளை மாற்றி இருக்கிறதா என்றால் இல்லை. ஊரடங்கை ஓரளவு தளர்த்தினால் உடனடியாக அனைவரும் கூட்டமாகச் சேர்ந்து விடுகிறோம். அதுதான் இங்கேயும் இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதைத்தான் வந்தவுடன் மருத்துவர் ரேலா அவர்களிடத்தில் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். இல்லை, இல்லை, தடுப்பூசிகள் எல்லாம் போடப்பட்டு, பரிசோதனை செய்துதான் உள்ளே அனுமதித்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் எவ்வளவுதான் விழிப்புணர்வை ஏற்படுத்தினாலும் அதனை உணராத சிலர் இருக்கின்ற காரணத்தினால்தான் வைரஸ் பரவலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதில் தாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் அரசாங்கம் மட்டுமல்ல, இதுபோன்ற மருத்துவமனைகள், தன்னார்வ அமைப்புகள், சேவை நிறுவனங்களும் சேர்ந்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த கொரோனா காலக்கட்டத்தில் மருத்துவத்துறையினர் செய்த சேவைகளை நம்மால் நிச்சயமாக மறக்க முடியாது. உயிரையே பணயம் வைத்து மருத்துவர்கள், செவிலியர்கள் தொண்டாற்றியிருக்கிறார்கள், இன்னும் தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் இந்த நேரத்திலே என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் தரமான மருத்துவமனைகள் - திறமைமிக்க மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த மாணாக்கர்களை உருவாக்குவதில் சர்வதேச தரத்தை இலக்காகக் கொண்டு செயல்பட

வேண்டும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு நான் அறிவுறுத்தியிருக்கிறேன்.

புதிது புதிதாக நோய்கள் வருகின்றன. அவை பல நேரங்களில் மருத்துவர்களாலேயே கண்டுபிடிக்க முடியாத நோய்களாகவும் இருந்துவிடுகின்றன. இத்தகைய சூழலில் ரேலா மருத்துவமனை போன்ற உலகத்தரம் வாய்ந்த பல்வேறு மருத்துவ மையங்கள் தமிழ்நாட்டில் உருவாக வேண்டும். தொடக்க நிலையில் இருந்து - கடினமான நிலை வரை இருக்கக்கூடிய அனைத்து நோயாளிகளையும் காப்பாற்றுவதற்கான அதிநவீன சிகிச்சை மையமாக ரேலா மருத்துவமனை திகழ வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, மருத்துவர் ரேலா அவர்கள், மருத்துவர் ஸ்ரீநிஷா அவர்கள் அதேபோல நம்முடைய ஜெகத்ரட்சகன் ஆகிய மூவருக்கும் தமிழக அரசின் சார்பில் என்னுடைய பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9